

நாமக்கல் கிழக்கு மாவட்டம் ராசிபுரம் சட்டமன்றத் தொகுதியில் புதிய பேருந்து நிலையம் அருகே மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகள் சார்பில் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் மருத்துவர் மா. மதிவேந்தன் கலந்து கொண்டு உரையாற்றினார். ஆர்ப்பாட்டத்தில் என். ஆர்சங்கர், கே.பி.ஜெகநாதன், கவிதா சங்கர், சுப்பிரமணி, மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்கள் மற்றும் கழக நிர்வாகி கள், சார்பு அணி நிர்வாகிகள் பொது மக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க தமிழ்நாட்டுக்கு திட்டங்களும் இல்லை,அடுப்பு எரிய கேஸ் சிலிண்டரும் இல்லை தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் ஒன்றிய அரசையும், அதன் கூட்டணி கட்சிகளையும் கண்டித்து கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அண்ணா சிலை அருகில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகள் சார்பாக கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன் தலைமையில் ஒன்றிய அரசுக்கு எதிராக கண்டன கோஷங்களை எழுப்பினர். மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாநில அமைப்புசாரா ஓட்டுனர் அணி செயலாளர் செங்குட்டுவன், மாநில வர்த்தக அணி துணை செயலாளர் அன்பரசன், மாவட்டத் துணைச் செயலாளர் சாவித்திரி, நகர பொறுப்பாளர்கள் அஸ்லாம் வேல்மணி , ஒன்றிய செயலாளர்கள் தனசேகரன், மகேந்திரன், நாராயணன் மற்றும் கூட்டணி கட்சியினர் பல்லாயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

### அடுப்பு எரிக்க கேஸ் சிலிண்டர் இல்லை;– ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து

# பொன்மலையில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யா மொழி கண்டன உரை!

திருவெறும்பூர், மார்ச் 18-

தமிழ்நாட்டுக்கு திட்டங்களும் இல்லை; அடுப்பு எரிக்க கேஸ் சிலிண்டரும் இல்லை என மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் பொன்மலை ரயில்வே பணி முன்பு நடந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழக பள்ளித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கலந்து கொண்டு ஒன்றிய அரசுக்கு எதிராக கோஷங்களை எழுப்பினார்.





தமிழ்நாட்டின் கேஸ் சிலிண்டர் தட்டுப்பாடு பெரிய அளவில் ஏற்பட்டுள்ளது இதற்கு காரணமாக ஒன்றிய அரசைக் கண்டித்து தமிழகம் முழுவதும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் பகுதி ஒன்றிய,நகர, பேரூர், கழகம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்த வேண்டுமென தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

அதன் ஒரு பகுதியாக திருவெறும்பூர் தொகுதிக்கு உட்பட்ட பொன்மலை பணிமனை பகுதியில் நடந்த ஆர்ப்பாட்டத்திற்கு தமிழக பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமை வைத்து பேசியதாவது:-

எனது துறையான பள்ளிக்கல்வித்துறை ஒன்றிய அரசு ரூ 3458 கோடி ரூபாய் வழங்க வேண்டும் அதை வழங்கவில்லை. அதே போல் ஒவ்வொரு இல்லத்திற்கும் குடிநீர் சென்றசேரும் விதம் ஜல் ஜீவன் திட்டத்தின் மூலம் குடிநீர் பைப் பதித்தத்திற்கு உரிய ரூ 3112 க்கு கோடி வரவில்லை அதேப்போல் 100 நாள் வேலை திட்டத்திற்கு வழங்க வேண்டிய ரூ. 2000 கோடியையும் தராமல் வஞ்சித்துள்ளது.

### பா.ஜ.க.வை வெயிட்டிங் லிஸ்டில் வைக்க வேண்டும்!

மேலும் ஒன்றிய அரசு பதவியேற்ற போது 500 மற்றும் ஆயிரம் ரூபாய் செல்லாது என கூறி எல்லோரையும் பெரிய லைன் நிற்க வைத்தது தற்பொழுது கேஸ் புக்கிங் காக அது போல் தற்போது லைனில் நிற்க வைத்துள்ளது ஒரு கேஸ் புக்கிங் செய்தால் அதற்கு 21 நாள் காத்திருக்க வேண்டும்.

நம்மை காக்க வைத்துள்ளது தேர்தலில் பா.ஜ.க.வை வெயிட்டிங் லிஸ்டில் வைக்க வேண்டும்.

இந்த இடத்தில் நாம் ரயிலுக்குத் தேவையான நல்ல இன்ஜினை தயாரித்து கொடுக்கிறோம். ஆனால் அவர்கள் டப்பாநெஞ்சினை தான் நமக்கு தருகின்றனர்.

நமது பலம் தோழமை பலம் தான் இந்த பிரச்சினை தற்பொழுது இரு நாடுகளுக்கு இடையே இருந்துள்ள சண்டையால் தான் ஏற்பட்டுள்ளது என கூற முடியாது கடந்த ஜூன் மாதத்தில் இருந்தே இந்த சண்டை நிகழ்ந்து வருகிறது.அதற்கு தேவையான முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை இன்றைய அரசு எடுத்திருக்க வேண்டும்.

ஆனால் அதனை செய்யவில்லை நமது தமிழக முதல்வர் இந்த கேஸ் சிலிண்டர் தட்டுப்பாட்டை பொதுமக்கள் படும் இன்னலை போக்கும் வகையில் எலக்ட்ரிக் ஸ்டவ் பயன்படுத்துவர்களுக்கு மின் கட்டணத்திலிருந்து யூனிட் ஒன்றுக்கு இரண்டு ரூபாய் மானியம் வழங்கியுள்ளார்.

இந்திய அரசியலமைப்பு சட்டத்தில் உள்ளது பெட்ரோல் சார்ந்த பிரச்சினைகளை தீர்வு காண்பதற்கு ஒன்றிய அரசின் கடமை என்று அமெரிக்கா சொல்வதை மட்டும்தான் செய்கின்றனர்.

### வெளியுறவு கொள்கை சரியாக இல்லை!

வெளியுறவு கொள்கை இவர்களிடம் சரியாக இல்லை. ரஷ்யாவிடமிருந்து பெற்ற பெட்ரோலை வாங்கி கொடுத்திருக்கலாம். இது பற்றி கூட்டணி கட்சிகள் இன்னும் விரிவாக உங்களுக்கு எடுத்த கூறுவார்கள். நாட்டு மக்களுக்கும் உற்றார் உறவினர்களுக்கும் இந்த பிரச்சனைகளை நீங்கள் எடுத்துச் சொல்லி வாக்கு சேகரிக்க வேண்டும் என்றார்.

தி.மு.க.மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன்

காங்கிரஸ் மாநிலங்களவை உறுப்பினர் கிறிஸ்டோபர் திலக், காங்கிரஸ் மாவட்ட தலைவர் ரெக்ஸ், மதிமுக ரொக்கையா மாலிக், கம்யூனிஸ்ட் சிபிஐ மற்றும் சிபிஎம் வெற்றி, ராஜ்குமார்,

விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மாவட்ட செயலாளர் ரமேஷ், தே.மு.தி.க. மில்டன், இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் மொய்தின், மனிதநேய மக்கள் க.ட்சி மாவட்ட செயலாளர் ராஜா

பார்வர்ட் பிளாக் தமிழக வாழ்வுரிமை கட்சி வீர முத்திரையர் முன்னேற்ற கழகம் மட்டும் தோழமைக் கட்சி நிர்வாகிகள் கழக நிர்வாகிகள் பெரும் திரளாக கலந்து கொண்டு ஆர்ப்பாட்டத்தில் கோஷங்களை எழுப்பினர்.

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி செய்தியாளர்களை சந்தித்த போது

கேஸ் தட்டுப்பாட்டால் பள்ளி மாணவர்களுக்கான காலை உணவு திட்டம் சத்துணவு திட்டம் எதுவும் நிறுத்தப்படாமல் தொடர்ச்சியாக வழங்குவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்துள்ளோம்.

இந்திய அரசு அமெரிக்க அதிபரிடம் சரணடைந்துவிட்டது. சீனா அது போல் அமெரிக்காவிடம் அடிபணியாமல் இருந்ததால் தான் இன்னும் 200 நாட்களுக்கு அவர்கள் எரிவாயு கையிருப்பில் வைத்துள்ளார்கள்.

### டிரம்பிற்கு அடிபணிந்து போகிறார்!

பிரதமர் மோடி, டிரம்பிற்கு அடிபணிந்து போகிறார். டிரம்ப்பை எதிர்த்து கேள்வி கேட்க தைரியம் இல்லாதவராக பிரதமர் இருக்கிறார் என்பது நமக்கு வருத்தமாக உள்ளது.

த.வெ.க என்.டி.ஏ கூட்டணி குறித்து யூகத்தின் அடிப்படையில் எந்த பதிலும் கூற முடியாது.

ஒன்றிய அரசு ஏதாவது தவறு செய்தது என்றால் அதை எதிர்த்து விஜய் பேசுவதில்லை. எந்த கருத்தையும் கூறுவதில்லை.

தமிழ்நாட்டின் உரிமைகள் பறிக்கப்படும் பொழுது களத்தில் வந்து நிற்பது மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியினர் தான். விஜய் எந்த கருத்து கூறாமல் இருப்பதையும் மக்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

தேர்தல் நேரத்தில் கட்சி நிர்வாகிகளை ஊக்கப்படுத்துவது கட்சி தலைமையின் பொறுப்பு அந்த வகையில் தான் திருச்சியில் நிர்வாகிகள் சந்திப்பு மாநாடு ஏற்பாடு செய்து இருந்தோம் திமுக அரசின் சாதனைகளை நிர்வாகிகள் மூலம் மக்களிடம் கொண்டு செல்லவே இதனை ஏற்பாடு செய்திருந்தோம்.

பெட்ரோல் டீசல் விலை ஏற தற்போது வாய்ப்பில்லை. ஆனால் தட்டுப்பாடு வந்தால் பெட்ரோல் டீசல் விலையும் உயரும் எனவே முன்கூட்டியே இதற்கு உரிய நடவடிக்கையை ஒன்றிய அரசு எடுக்க வேண்டும் என்றார்.



தலைமைக் கழக அறிவிப்பிற்கு இணங்க தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் என்.டி.ஏ. அரசையும், அதன் அடிமைக் கூட்டணியையும் கண்டித்து மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் சூலூர் புதிய பேருந்து நிலையத்தில் கோவை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் தலைமையில் சூலூர் பேரூர் கழக செயலாளர் கவுதமன் முன்னிலையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள், மாநில, மாவட்ட, பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், அனைத்து சார்பு அணி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க.

## வாக்குசாவடி முகவர்கள் மற்றும் செயல் வீரர்கள் கூட்டம்!

### மாவட்ட கழக செயலாளர் நிவேதா.எம்.முருகன் எம்.எல்.ஏ.அறிவிப்பு!



கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளர் - துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி,

**வாக்குசாவடி முகவர்கள் மற்றும் செயல் வீரர்கள் கூட்டம்**

மயிலாடுதுறை மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர், கழகங்களில் வாக்குசாவடி முகவர்கள் மற்றும் செயல் வீரர்கள் கூட்டம் கீழ்கண்ட அட்டவணை படி நடைபெறுகின்றது.

| வ. எண் | நாள் | நேரம் | ஒன்றியம், நகரம், பேரூர் | இடம் |
|---|---|---|---|---|
| பூம்புகார் சட்டமன்ற தொகுதி | | | | |
| 1 | 18-03-2026 | காலை 10.00 மணி | செம்பனார்கோவில் வடக்கு, தெற்கு, மத்திய - ஒன்றியங்கள் சீர்காழி கிழக்கு - ஒன்றியம் தரங்கம்பாடி பேரூர். | PKC திருமண மண்டபம் செம்பனார்கோவில் |
| 2 | 18-03-2026 | மாலை 04.00 மணி | குத்தாலம் வடக்கு, கிழக்கு,மேற்கு - ஒன்றியங்கள் | PMS திருமண மண்டபம் ஸ்ரீகண்டபுரம் |
| சீர்காழி சட்டமன்ற தொகுதி | | | | |
| 3 | 19-03-2026 | காலை 10.00 மணி | சீர்காழி நகரம், சீர்காழி கிழக்கு, மேற்கு - ஒன்றியங்கள், செம்பை வடக்கு ஒன்றியம், வைத்தீஸ்வரன்கோவில் பேரூர். | இந்திரபவன் திருமண மண்டபம் வைத்தீஸ்வரன்கோவில் |
| 4 | 19-03-2026 | மாலை 04.00 மணி | கொள்ளிடம் கிழக்கு,மேற்கு - ஒன்றியங்கள். | அருண் பாலாஜி திருமண மண்டபம் - கொள்ளிடம் |
| மயிலாடுதுறை சட்டமன்ற தொகுதி | | | | |
| 5 | 20-03-2026 | காலை 10.00 மணி | மயிலாடுதுறை நகரம், மயிலாடுதுறை கிழக்கு, மேற்கு ஒன்றியங்கள், குத்தாலம் வடக்கு ஒன்றியம், குத்தாலம் பேரூர். | AJK மஹால் கணபதி நகர், மயிலாடுதுறை |
| 6 | 20-03-2026 | மாலை 04.00 மணி | மயிலாடுதுறை வடக்கு, மத்திய - ஒன்றியங்கள், மணல்மேடு பேரூர். | பத்மவாசன் திருமண மண்டபம் பல்லவராயன்பேட்டை |

இக்கூட்டத்திற்கு தொகுதி பார்வையாளர்கள், மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், இந்நாள்,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக செயலாளர்கள், பிரதிநிதிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், இந்நாள், முன்னாள் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூராட்சி மன்ற தலைவர்கள், பாகநிலை முகவர்கள் (BLA-2), பாக டிஜிட்டல் முகவர்கள் (BDA) மற்றும் செயல் வீரர்கள் அனைவரும் அவரவர் ஒன்றிய, நகர, பேரூர் பகுதிகளில் நடைபெறும் கூட்டத்தில் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமென அன்புடன் கேட்டுகொள்கிறேன்.

**குறிப்பு:** ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் கூட்ட அறிவிப்பு குறித்த துண்டு பிரசுரம் அனைவருக்கும் கிடைக்க செய்து, கூட்டம் சிறப்பாக நடத்திட ஏற்பாடுகளை செய்திட வேண்டும்.

**நிவேதா.எம்.முருகன் எம்.எல்.ஏ.**
மாவட்ட கழக செயலாளர்
மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மதுரை கே.டி. கூடலரசன்
### மார்ச் 18 (1999)



பள்ளிப் பருவத்திலேயே தி.மு.கழகப் பேச்சாளராக விளங்கியவர்.

இவர் அரசுப் பணியில் இருந்துகொண்டே கழகப் பிரச்சாரத்தை மேற்கொண்டதால், அன்றைய அரசால் அரசுப் பணியிலிருந்து நீக்கப்பட்டவர். அப்படி நீக்கிய பின்னரும், அதற்காக வருந்தாது, மேலும் எழுச்சியுடன் கழக மேடைகள் தோறும் கொள்கை முரசம் செய்தவர்.

முரசொலி உள்ளிட்ட பல பத்திரிகைகளில் கட்டுரை எழுதி பெயர் பெற்றவர்.

தொ.மு.ச. அமைப்பில் பல்வேறு பொறுப்புகளை வகித்து, தொழிலாளர்களின் நலன் காக்க பாடுபட்ட இவர், சாலை விபத்தில் மரணமடைந்தார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா ஏ. சுப்ரமணியன்
### மார்ச் 18 (2012)



காஞ்சிபுரம் நகரக் கழகச் செயலாளராக நான்கு முறையும், தலைமைச் செயற்குழு உறுப்பினராக நான்கு முறையும் தேர்ந்தெடுக்கப்பட்டு கழகப் பணியினை சிறப்பாக மேற்கொண்டவர்.

நகர்மன்ற துணைத் தலைவராகவும், பெருநகர மன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

நெருக்கடி நிலைக் காலத்தில் ஒரு வருடம் மிசா கைதியாக சிறையில் இருந்தவர். இதுதவிர கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.